**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 14/2017**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 13 |
| Name (திரு/திருமதி) | : பூபதி |
| Father's Name/ Husband's Name | : சென்ராயன் |
| Village & Taluk | : திருப்பத்துார் |
| Calling | : காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| Age | : 65 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் திருவண்ணாமலை மாவட்டம் மேல்செங்கம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிசெய்து கடந்த 31.05.2019 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 27-04-2016 அன்று செஞ்சி கா.நிலையத்தில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளராக திரு. டார்ஜன் என்பவர் பதிவு செய்து செய்த குற்ற எண் 216/2016 இதச பிரிவுகள் 279, 304 ஏ வழக்கினை நான் கடந்த 10.06.2016 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சிகள் உதவி ஆய்வாளர் அவர்களிடம் கூறியது போல் என்னிடம்கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும், இவ்வழக்கு விபத்தில் விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனமான TN 32 AB 0617 என்ற வாகனத்தையும் விபத்துக்குள்ளான இரு சக்கர வாகனமான TN 32 Y 8689 TVS XL 50 வாகனத்தையும் ஆய்வு செய்த செஞ்சி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. செல்வம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். மேற்படி அறிக்கைகளில் விபத்தானது எவ்வித இயந்திர கோளாரினால் ஏற்படவில்லை என கருத்து தெரிவித்து அ றிக்கைகள் வழங்கியுள்ளார்.

2. பின்பு இந்த இவ்வழக்கு விபத்தில் இறந்த ஏழுமலை என்பவரின் பிரேத்தின் மீது பிரேத பரிசோனை செய்த முண்டியம்பாக்கம் மருத்துவமனை மருத்துவக்கல்லூரி வடிவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பிரேத அறிக்கை பெற்றேன். மேற்படி அறிக்கையில் இறந்த நபர் தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவினால் இறந்திருக்க கூடும் என கருத்து தெரிவித்து சான்று வழங்கியுள்ளார்.

3. பின்பு இவ்வழக்கின் விசாரணையை முடித்து விபத்து ஏற்படுத்திய எதிரி ராஜசேகரன் என்பவர் மீது கடந்த 10.06.2016 அன்று இதச பிரிவு 279, 304 A ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கு விபத்தில் இறந்த ஏழுமலை என்பவருக்கு சம்பவத்தின்போது ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். காயமடைந்த நபரை முதலில் செஞ்சி அரசு மருத்துவமனையிலும், அதன் பின்னிட்டு ஜிப்மர் மருத்துவமனையிலும் சேர்த்துவிட்டு வந்து புகார் அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செஞ்சியில் முதலுதவி அளித்த மருத்தவர் மற்றும் ஜிப்மர் மருத்துவமனையில் இறந்த நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரையும் இவ்வழக்கு தொடர்பாக நான் விசாரித்து மருத்துவ ஆவணங்களை பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. இறுதி அறிக்கையில் இறந்த நபர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதில் ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட விவரத்தை குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். உதவி ஆய்வாளர் சாட்சிகளை 28.04.2016 அன்று விசாரித்துள்ளார் என்றாலும், அதன் பின்னிட்டு நான் மேற்படி சாட்சிகளை விசாரிப்பதற்காக சம்மன் சார்வு செய்தேனா என்றால் இல்லை.

3. உதவி ஆய்வாளர் சாட்சிகளிடம் இருந்து பெற்ற வாக்குமூலத்தில் நான் Counter Sign செய்து சாட்சிகள் அவரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறினார்கள் என்று குறிப்பு எழுதவில்லை என்றால் சரிதான். நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், சம்மன் சார்வு செய்யாமல் சாட்சிகளை விசாரித்திருக்க இயலாது என்றாலும் , சம்பவ இடத்தில் சாட்சிகள் நான் சென்றபோது இருந்திருக்க வாய்ப்புகள் இல்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. அரசு தரப்பு சாட்சிகள் யாரும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை அடையாளப் படுத்தவில்லை என்றாலும், ஓட்டுநரின் விவரங்களை குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். புகார் மனுவின் இறுதியில் தேதி நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், நான் சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.